Bacteriological examination of motion from these cases were negative for salmonella, schigella and vibrios. Examination of water from Nagapattinam and Mannargudi supplies is under progress and results are awaited.

The District Health Officer and Municipal Health Officer have been instructed to take necessary control measures in this area and two vans have been specially provided for prompt removal of cases for treatment. Besides removal of cases for treatment, the infected houses and surrounding locality were disinfected. Chlorination of water-supply, improvement of environmental sanitary conditions including anti-fly measures were also undertaken. The situation is under surveillance, and is under control and there is no cause for alarm.

6. அறிக்கை அளித்தல்

'கடிதம்' நாளிதழின் ஆசிரியர்-பதிப்பாளர்மீதான உரிமை வழக்கு குறித்து அறிக்கை அளித்தல்

திரு. ஜி. ஆர். எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, "'கடிதம்' தமிழ் நாளிதழின் ஆசிரியர்—பதிப்பாளர் மீது கொண்டுவரப்பட்ட உரிமை வழக்குகுறித்த அவையுரிமைக் குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்.

7. அவையுரிமைக் கேள்வி

'கடிதம்' நாளிதழின் ஆசிரியர்—பதிப்பாளர் மீதான உரிமை வழக்குகுறித்த அறிக்கையை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளல்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று சட்டப் பேரவை முன் அளிக்கப்பட்ட 'கடிதம்' தமிழ் நாளிதழின் ஆசிரியர்—பதிப்பாளர் மீதான அவையுரிமைக் குழுவின் அறிக்கை சட்டப் பேரவையின் 191(b) விதியின் கீழ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Dr. H. V. HANDE: Under Rule 191 (a) and (c) the report of the Committee of Privileges shall be presented to the Assembly by the Chairman and any member may give notice of amendment to the motion for consideration of the report. The report of the Committee of Privileges was presented to us this morning at 9 O' clock and we had no time to give notice of amendments. In fact I want to give a few amendments to the report. If the report had been placed in our hands last night, we would have had time to go through it and give notice of amendments which may even be accepted. Hereafter at least I request the Chair to take a decision that such reports are circulated in advance at least to the members privately.

1969 செப்டம்பர் 12]

With regard to the motion itself. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குத் திருத்தம் கொடுக்க வாய்ப்பில்லை என்பது தானே உங்கள் வாதம்? அவையிலே அந்த அறிக்கையைக் கொடுத்த பிறகுதானே, திருத்தம் கொடுக்கும் உரிமை வருகிறது? ஆகவே, இப்பொழுது இன்னொரு நாள் இதை எடுத்துக் கொள்ளலாம், விவாதிக்கலாம் என்றால், இன்றைக்கு அறிக்கையை அவைக்கு அளித்த அளவோடு வைத்துக் கொண்டு, திருத்தம் கொடுத்து, இன்னொரு நாள் விவாதித்துக் கொள்ளலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, இப்படிப்பட்ட அறிக்கை சபைமுன் வைக்கப்படவேண்டும். அநேகமாக, பிரிவிலேஜ் கமிட்டி அறிக்கை கொடுத்த பிறகு, விவாதம் இல்லாமல் ஏற்றுக்கொள்வது என்கிற மரபு இருக்கிறது என்பதைத் தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். திருத்தம் கொடுக்க உரிமை இருக்கிறது. ஆனாலும், கமிட்டி ஒரு முடிவுக்கு வந்தபிறகு, விவாதம் நடத்த வேண்டாம் என்கிற மரபை அநேகமாக கையாண்டு வந்திருக்கிறோம் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி, எஸ்டிமேட்ஸ் கமிட்டி போன்ற கமிட்டிகளின் ரிபோர்ட்டுகளை அப்படியே சபை ஏற்றுக்கொள்வதுதான் வழக்கம் என்பதை ஞாபகப்படுத்த மட்டும் விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிடுவது போன்ற முறை, மரபு இருக்கிறது. அப்படியே ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேறுகிறது வழக்கம். ஆனாலும், டாக்டர் ஹாண்டே அவர்கள் சட்டமன்ற விதிமுறைகளை ஒட்டி விவாதிக்க வாய்ப்பு வேண்டும் என்று சொன்னால், அதைக் கொடுப்பதிலும் தவறு இல்லை.

Dr. H. V. HANDE : If I can speak straightaway now itself. . . . .

Mr. SPEAKER : No, no.

Dr. H. V. HANDE : We will have it tomorrow.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அஜெண்டாவில் எப்பொழுது வருகிறதோ அப்பொழுது எடுத்துக் கொள்ளப்படும்.

8. அரசினர் தீர்மானம்

கிழக்கு தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர் சிக்கல்கள் குறித்த திரு. கணபதியா பிள்ளை விசாரணைக் குழுவின் அறிக்கை மீது விவாதம்

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

175-208-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.